<u>சுருக்கம்</u>

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்** – கல்வி – சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் அரசு ஒதுக்கீடு செய்யும் இலவச / கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவ / மாணவியர்க்கு கட்டாய, திருப்பி செலுத்தப்படாத அனைத்து கல்வி கட்டணங்களை வழங்கி ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

<u>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை</u>

அரசாணை ( நிலை) எண் : 6 நாள் : 09.01.2012

மார்கழி 24, திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்கப்பட்டது.

1) அரசாணை (நிலை) எண்.26, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 30.03.2000.
2) ஆணையர், ஆதிதிராவிடர் நலம் கடித எண்.ஜே1/22811/2009, நாள் 25.03.2011 மற்றும் 11.04.2011.

-----

**ஆணை :**

மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு செய்யும் இலவச இடங்களில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்க்கு அவர்களது பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50,920/–க்குள் உள்ளவர்களுக்கு அரசு மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் அப்படிப்பிற்கு விதிக்கப்படும் கல்வி கட்டண அளவிற்கு கல்வி கட்டணச் சலுகை வழங்கி ஆணையிடப்பட்டது. இவ்வாணையின் மூலம் அளிக்கப்பட்ட கல்வி கட்டணச் சலுகை அரசு / அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் விதிக்கப்படும் கட்டண அளவிற்கே சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு செய்யும் இலவச இடத்தில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

2) ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர், தன்னுடைய கருத்துருவில் மைய அரசின் வழிகாட்டுதலின்படி கட்டாய மற்றும் திருப்பி செலுத்தப்படாத அனைத்து கட்டணங்களும் வழங்கப்பட வேண்டும் என உள்ளதால் இலவச இடங்களில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து மேல்நிலைக்கு பிந்தைய படிப்புகளுக்கான உதவித் தொகை மைய அரசின் வழிகாட்டுதலின்படி முழுமையாக வழங்கலாம் எனவும் இந்த உதவித் தொகை எல்லா வகையான அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ / மாணவியர்க்கு பொருந்தும் எனவும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கு சுயநிதிக் கல்லூரிகளில் சேர்ந்து பயில தடையாக உள்ள அரசாணை (நிலை) எண்.26, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 30.03.2000–த்தை ரத்து செய்யலாம் எனவும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3) ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து “சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு செய்யும் இலவச இடங்களில் பயிலும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்க்கு அவர்களது பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.50,920/–க்குள் உள்ளவர்களுக்கு அரசு மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் அப்படிப்பிற்கு விதிக்கப்படும் கல்வி

கட்டண அளவிற்கு கல்வி கட்டணச் சலுகை வழங்கி ஆணையிட்டுள்ள அரசாணை (நிலை) எண்.26, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 30.03.2000''–ல் மாற்றம் செய்து, சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் (சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் உட்பட) அனைத்துவிதமான படிப்புகளுக்கும் இலவச / கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிட / பழங்குடியின மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில் திருப்பி செலுத்தப்படாத அனைத்து கட்டாயக் கட்டணங்களையும் (Enrollment / Registration, Tuition, Games, Union, Library, Magazine, Medical Examination and such other fee compulsory payable by the scholar to the institution or university / board) அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு **"அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக் குழு"** நிர்ணயித்த திருப்பி செலுத்தப்படாத கட்டாய கட்டணம் அனைத்தையும் மைய அரசின் உதவித்தொகை திட்டத்தின் கீழ் 2011–2012ஆம் கல்வி ஆண்டிலிருந்து வழங்க அரசு ஆணையிடுகிறது.

4) இத்திட்டத்தில் பயன் பெற ஆதிதிராவிடர் / பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவ / மாணவியர்களின் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூபாய் இரண்டு இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

5) மேலே பத்தி 3–ல் ஆணையிடப்பட்ட சலுகையின் மூலம் ஏற்படும் கூடுதல் செலவினம் ஏற்கனவே நடைமுறையிலுள்ள கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும். இச்செலவினத்திற்கு தேவைப்படும் கூடுதல் தொகை திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த மதிப்பீட்டில் பெற்றுக்கொள்ள உரிய கருத்துருக்களை உரிய காலத்தில் அரசுக்கு அனுப்ப ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை அறிவுறுத்தப்படுகின்றார்.

6) இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு. எண்.03/DS(VS)/2011, நாள் 06.01.2012 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ஆ.சு. ஜீவரத்தினம்,**
**அரசுச் செயலாளர்**

**பெறுநர்:–**
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
இயக்குநர், பள்ளி கல்வித்துறை, கல்லூரி சாலை, சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் /
அனைத்து மாவட்ட ஆதி(ம)பந அலுவலர்கள்.
மாநிலக் கணக்காய்வு தலைவர், சென்னை–6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–8/35/6.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
**நகல்:–**
நிதித் (ஆதி(ம)பந / வசெ பொது–II) துறை, சென்னை–9.
பள்ளி கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
அனைத்துப் பிரிவுகள், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

பிரிவு அலுவலர்